தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

நந்தன, தை 23, திருவள்ளுவர் ஆண்டு—2044

2013 பிப்ரவரி 5, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்; அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை."

செல்வங்களுள் எல்லாம் சிறப்பானது செவியால் கேட்டறியும் செவிச்செல்வம்தான். அது அனைத்துச் செல்வங்களிலும் முதன்மையான செல்வமாகும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

1—

துணை மின் நிலையம்

***17696—திரு. கடம்பூர் ராஜூ:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி தொகுதி, கயத்தார் ஒன்றியம், செட்டிகுறிச்சி கிராமத்தில் 110 கி.வோ. திறன் கொண்ட துணை மின் நிலையத்தினை உடனடியாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2013 பிப்ரவரி 5

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவில்பட்டி சட்டமன்றத் தொகுதி, கயத்தார் ஒன்றியம், செட்டிகுறிச்சி கிராமத்தில் உள்ள மின்பளுவை நிறைவு செய்ய, 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையமே போதுமானது. எனவே, அங்கே 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்கத் தேவையில்லை. அதற்குப் பதிலாக 33/11 கிலோ வோல்ட் திறன் கொண்ட புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள்.

திரு. கடம்பூர் ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்தின் தமிழ்த் தாய், நாளைய பாரதத்தின் பாரத மாதா, என்றும் எங்கள் அம்மாவினுடைய பொற்பாதம் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) செட்டிகுறிச்சி கிராமத்தில் 33/11 கிலோ வோல்ட் திறன் கொண்ட ஒரு துணை மின் நிலையம் அமைக்க ஆவன செய்யப்படும் என்று அறிவித்த, கேட்டவுடன் கொடுக்கின்ற அரசாக இருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். காலத்தின் அடிப்படையில், தேவையின் அடிப்படையில் அதை 110 கிலோ வோல்ட் திறன் கொண்டதாக பிற்காலத்தில் மாற்றுவதற்கும் ஆவன செய்ய வேண்டும் எனக் கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் கையகப்படுத்துகின்ற பணி நடைபெற்று வருகிறது. நிலம் கையகப்படுத்துகின்ற பணி முடிவடைந்தவுடன், செட்டிகுறிச்சி கிராமத்திலே புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை அரசு விரைவாக மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2013 பிப்ரவரி 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் பொற்பாதம் பணிந்து, எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட அரக்கோணம் நகர மக்களுக்காக ஆர்.ஏ.பி., டி.ஆர்.பி. திட்டத்தின் மூலமாக 33 கே.வி. ஆளில்லா துணை மின் நிலையம் நகராட்சி எல்லைக்குள் அமைத்திட கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு 7 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நகர எல்லைக்குள் அரசு புறம்போக்கு நிலம் ஏதும் இல்லாததால் மின்சாரத் துறை கேட்டுக்கொண்டதன் பேரில் நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் துணை மின் நிலையம் அமைக்க நகர்மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, நகராட்சி நிருவாக ஆணையருக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆனால், நகராட்சி நிருவாகம் நிலம் வழங்க இயலாது எனத் தெரிவிக்கின்றது. இதனால், இத்திட்டம் நீண்ட காலமாக நிறைவேற்றப்படாமல் உள்ளது. கேட்காமலே கொடுக்கும் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக இடம் பெற்று, துணை மின் நிலையம் அமைக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ள அரக்கோணம் பகுதியிலே புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு கருத்துருக்கள் ஏற்கப்பட்டு, 12—வது ஐந்தாண்டுத் திட்டத்திலே மேற்படி துணை மின் நிலையம் அமைப்பதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், அதற்குரிய நிலத்தைக் கண்டறிவதிலே காலதாமதம் ஏற்பட்டதன் காரணமாக அந்த திட்டப் பணிகள் மேற்கொள்ள காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடு)

[2013 பிப்ரவரி 5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள், அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: அதற்கிடையிலே, இப்பொழுது நகராட்சி நிருவாகம், அதற்குச் சொந்தமான இடத்தை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்குவதற்கான தீர்மானத்தை நகரசபை மூலம் நிறைவேற்றியிருந்தால், அதற்கு இங்கே நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். உள்ளாட்சித் துறையிலே அதற்குரிய நடவடிக்கை எடுத்து, அந்த நிலத்தைக் கொடுத்தார்கள் என்று சொன்னால், நிச்சயமாக அம்மா அவர்களுடைய அரசு அங்கே புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு உடனடியாகப் பணிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–05

ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நகர எல்லைக்குள் அரசு புறம்போக்கு நிலங்கள் இல்லை எனத் தெரிவித்திருக்கிறார்.. ஒருவேளை நிலம் கையகப்படுத்த முடியவில்லை என்றால், உள்ளாட்சி அமைப்பிலிருந்து நிலம் கொடுப்பதற்கு சட்டச் சிக்கல்கள், பிரச்சினைகள் அல்லது ஏதாவது இடையூறுகள் இருக்குமேயானால் தனியார்கள் அவர்களுடைய நிலத்தைக்கூட தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கொடுக்க முன்வந்தால், அரசு வழிகாட்டி மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த வழிகாட்டி மதிப்போடு 50 சதவீதம் சேர்த்துக் கொடுத்து அந்த இடத்தைக் கொள்முதல் செய்வதற்கும் தமிழ்நாடு மின்சார வாரியம் தயாராக இருக்கிறது. ஆகவே, தனியார் நிலங்கள் கிடைத்தாலும்கூட அதை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னால், அதைக் கொள்முதல் செய்வதற்கு வழிவகை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.

திருமதி ம. சக்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே வணக்கம். எல்லாம் வல்ல எங்களுடைய குடும்ப தெய்வம், இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

2013 பிப்ரவரி 5]

மார்ச் 2000–ல் சீர்காழி தொகுதி, ஆச்சாள்புரத்தில் 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்கப்பட்டது. கடலோரப் பகுதி என்பதால் சூறாவளிக் காற்றால் அடிக்கடி மின் கம்பங்கள் பழுதாகி வருகின்றன. அதிக கிராமங்களைக் கொண்டதாகவும், விவசாயப் பெருமக்கள் வசிக்கக்கூடிய பகுதியாக இருப்பதாலும் போதுமான அளவுக்கு மின்சாரம் கிடைக்கவில்லை. எனவே ஆச்சாள்புரம் துணை மின் நிலையத்தை 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையமாக மாற்றியமைக்க இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதியில் இருக்கின்ற மின் பளுவினுடைய தேவையை நிறைவு செய்கின்ற அளவிலே 33/11 கிலோ வோல்ட் என்று சொன்னால், அதிலே 16* K.V.A. *திறன்கொண்ட மின்மாற்றிகள் வரை அமைக்கப்படும். ஆகவே, அங்கே 16* M.V.A. *திறன்கொண்ட மின்மாற்றிகளுக்கு மேலே மின் பளு இருக்குமேயானால், அதைக் கண்டறிந்து 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையமாக அதைத் தரம் உயர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும். அதற்கு முன்பாக அங்கு இருக்கின்ற மின் தேவையினுடைய அளவைக் கணக்கிட்டு, அதன் அடிப்படையிலே தேவை என்றால், அந்த மின் நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.*

திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சங்கரன்கோவில் தொகுதிக்குட்பட்ட குருவிகுளம் ஒன்றியத்தில் நக்கலமுத்தப்பட்டி என்ற பகுதியில் 5 கோடி ரூபாயில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு ஆணையிட்ட வாரி வழங்கும் வள்ளல், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது சார்பிலும், எனது தொகுதி*

[2013 பிப்ரவரி 5

மக்களின் சார்பிலும் கோடானு கோடி நன்றியினை பொற்பாதம் பணிந்து சமர்ப்பிக்கிறேன். இதற்கான பணிகள் எப்போது தொடங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கருத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12—வது ஐந்தாண்டுத் திட்டத்திலே இறுதி செய்யப்பட்டுள்ள அனைத்து புதிய துணை மின் நிலையங்களும் எந்தெந்த இடங்களிலே நிலம் விரைவாக கிடைக்கிறதோ அங்கெல்லாம் துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான பணிகள் விரைவாக நடைபெறுகின்றன. சில இடங்களிலே புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு உரிய நிலத்தைக் கண்டறிவதிலே சிரமம் இருப்பதால் காலதாமதம் ஏற்படுகிறது. அதிலே என்ன இடையூறு இருக்கிறது என்பதை அரசு கண்டறிந்து, இடையூறுகளைக் களைந்து விரைவாக துணை மின் நிலையம் அமைப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட அய்யம்பட்டி மற்றும் அலங்காநல்லூர் ஆகிய கிராமங்கள் இரண்டையும் பார்வையிட்டுச் சென்ற அதிகாரிகள், அந்த நிலம் அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலம் என்பதைக் கண்டறிந்து, அங்கே துணை மின் நிலையம் கட்டுவதற்கான பணிகளை நிறுத்தி வைத்துள்ளார்கள். நான், புறம்போக்கு நிலத்திலுள்ள இடத்தைக் காண்பித்தால், அவர்கள் நீர்வழி நிலம் என்று சொல்கிறார்கள். அதனால், அலங்காநல்லூர் பகுதியில் அந்தத் துணை மின் நிலையம் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாகக்கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

2013 பிப்ரவரி 5]

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று அவர் குறிப்பிடுகின்ற– அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அறநிலையத் துறையைப் பொறுத்த அளவிலே அவர்களுடைய நிலத்தை எடுக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு இணையான மாற்று இடத்தை வழங்க வேண்டும். அல்லது அதற்குரிய மதிப்பீட்டுத் தொகையை அவர்களுக்கு டெபாசிட் செய்திட வேண்டும். ஆகவே, அந்த அளவிலே அதிலே என்ன பிரச்சினை இருக்கிறது என்பதைக் கண்டறிந்து பிரச்சினைகளைத் தீர்த்து அங்கேயும் விரைவாக துணை மின் நிலையம் அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அம்மா அவர்களின் அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம் திருமூர்த்தி மலையில் மாவடப்பு, குறுமலை உள்ளிட்ட 18 செட்டில்மென்ட் கிராமங்கள் இதுவரை மின்சாரம் பார்க்காத பகுதிகளாக உள்ளன. சமீபத்தில் அந்த மலைக்கு நான் சென்றுவந்தபோது பக்கத்திலே காடம்பாறையில் அமைந்துள்ள புனல் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளாக இந்தக் கிராம மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அந்த மலையில் மின்சாரம், குடிநீர் இல்லை. அதாவது காடம்பாறை புனல் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து அந்த 18 கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதேனும் சிறப்பான திட்டத்தை ஏதேனும் அறிவிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மலைப் பகுதி கிராமங்களிலே மின் இணைப்புக் கொடுப்பதிலே அம்மாவின் அரசு எப்போதும் முனைப்பாக உள்ளது. ஆனால், ரிசர்வ் ஃபாரஸ்ட் பகுதியாக இருந்தால் மத்திய வனத் துறைச் சட்டத்தின்கீழ் வனத் துறையின் அனுமதி பெறுவதிலே பல சிக்கல்கள் வருகின்றன. வனத் துறையினுடைய அனுமதி பெறுவதற்குத்தான் காலதாமதம் ஏற்படுகிறது. வனத் துறையைப் பொறுத்தவரையில் மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை. மத்திய அரசின் வனத் துறை, சுற்றுசூழல் துறை ஆகியவற்றின் அனுமதியைப் பெற்றுத்தான் அந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவேதான், அந்தக் கிராமங்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதிலே சில சிரமங்கள் உள்ளன. இருந்தாலும்கூட, அப்படிப்பட்ட கிராமங்களிலே அம்மா அவர்களின் சீரிய திட்டங்களில் ஒன்றான சூரியஒளி மின்சக்தி என்று சொல்லக்கூடிய சோலார் மின்சக்தியைப் பயன்படுத்தி அந்தப் பகுதியில் தெரு விளக்குகள் அமைப்பதற்கு அம்மா அவர்களின் அரசு நிச்சயம் நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

2—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***323—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலத்திலுள்ள அனைத்து ஊராட்சி பகுதிகளுக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?